ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1777 - 2012 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.09.21
*1777 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1174 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1176 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிகளுக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஐப்பசி மாதம் 22 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆவணி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | உகன | கோணகெல்ல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வேவாகம்பத்துவ வடக்குப் பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |

9-589

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிகளுக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஐப்பசி மாதம் 22 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆவணி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | அலவ்வ | உடுகஹ தெற்கு போயவலான பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், குருநாகல் |

9-590

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஐப்பசி மாதம் 22 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஐப்பசி மாதம் 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | தலவாக்கலை அக்கரபத்தனை பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரெலியா பிரிவில் விவாகப் (பொது) தமிழ் மொழி பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், நுவரெலியா |

9-591

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை I ஆம் வகுப்பின் பதவிகள்**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவையின் I ஆம் வகுப்பு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் II ஆம் வகுப்பு அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 'ஏ4' அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விடய இலக்கங்கள் 1 தொடக்கம் 13.1 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் விடயம் 13.2 தொடக்கம் 15 வரையுள்ள பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அமைய விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்படவேண்டுமென்பதுடன் அவை 2012.10.22 அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு, 'நிபுணதா பியச', இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5" எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவை I ஆம் வகுப்பின் பதவிகள்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. **சம்பளங்களும் கொடுப்பனவுகளும்.**- எஸ்எல்-1-2006 இன்படி இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555 இல் இதற்கு தெரிவுசெய்யப்படுபவர்கள் அமர்த்தப்படுவது ரூபா 36,755 சம்பள நிலையிலாகும்.

1986.08.15 ஆந் திகதி 415 ஆம் இலக்க வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிலும், காலத்திற்குகாலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தங்களுக்கு அமைய உரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைவதன் மூலம் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படும்.

2. **தகைமைகள் :**

2.1 இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் கட்டாயமாக ஒரு வருடம் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்தவராகவும், பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும், பட்டப்பின் கற்கை பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா சான்றிதழ்கள் அல்லது அதற்குச் சமமான தகைமைகள் பெற்றிருத்தல் ;

அல்லது

2.2 இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் கட்டாயமாக ஐந்து வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்தவராகவும், தனது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும் இருத்தல்.

(திருப்திகரமான சேவைக்காலம் எனக் கருதப்படுவது யாதெனில் கடந்த ஐந்து வருடங்கள் காலப்பகுதிக்குள் சகல சம்பள உயர்வுகளையும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய முறையில் பெற்றிருப்பதுடன், வேறு ஒழுக்காற்று தண்டனை எதுவும் (எச்சரிக்கப்படுதல் தவிர) பெற்றிராத காலமாகும்.

3. பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளையும் அத்துடன் ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் வேறு ஏதேனும் ஆவணங்களையும் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) பட்டச் சான்றிதழ் அல்லது கல்விச் சான்றிதழ்கள் ;
(இ) இரண்டு குணநலச் சான்றிதழ்கள் ;
(ஈ) உயர் தொழில் திறன்சார் சான்றிதழ்கள் அத்துடன் தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ்கள் ;
(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சை தொடர்பிலான சான்றிதழ்கள்.

4. சகல விண்ணப்பதாரர்களும் தங்களது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர்கள் ஊடாக செயலாளர், இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

5. சகல விண்ணப்பதாரர்களும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் கீழ்காட்டப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கமையவும் வெற்றிட நிலைமைக்கேற்பவும் உயர் புள்ளிகளில் ஒழுங்கின் அடிப்படையில் நிரப்பப்படும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

கே. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும்
திறன் அபிவிருத்தி அமைச்சு.

இல. 354/2, 'நிபுணதா பியச',
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.

**இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் I ஆம் வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளியிடல் திட்டம்**

மொத்தப் புள்ளிகள் - 100

1. சேவை மூப்பிற்கு - 40 புள்ளிகள் :

1.1 பட்டப்பின் கற்கை பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவையின் II ஆம் வகுப்பில் 1 வருட சேவை அனுபவத்தை பூர்த்தி அடைந்த பின்னர் பூர்த்தியாக்கப்பட்ட ஒவ்வொரு வருடங்களின் எண்ணிக்கைக்காக ஒவ்வொரு வருடத்திற்கும் 4 புள்ளிகள் வீதம்
- கூடியது 40 புள்ளிகள்

1.2 இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் வகுப்பு II இல் 5 வருட சேவை அனுபவத்தை பூர்த்தியாக்கிய பின்னர் பூர்த்தியாக்கப்பட்ட ஒவ்வொரு வருடங்களின் எண்ணிக்கைக்காக ஒவ்வொரு வருடத்திற்கும் 4 புள்ளிகள் வீதம்
- கூடியது 40 புள்ளிகள்

(31.07.2012 வரையே சேவைக்காலம் கவனத்தில் எடுக்கப்படும்.)

2. **திறன்களுக்கு** - 60 புள்ளிகள் :

2.1 தொழில்சார் தகைமைகள் பெறப்பட்டிருப்பின்
- கூடியது 20 புள்ளிகள்

(இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் 12.1 சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் வகுப்பு I இற்கு பொருத்தமானவர்களை பதவி உயர்த்துவதற்காக பட்டத்திற்கே மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக பட்டப்பின் கற்கை பட்டம், பட்டப்பின் கற்கை டிப்ளோமா அலுவலர்களால் வழங்கப்படுமாயின் அவை அடிப்படை தகைமைகளாகக் கருதப்படும்.)

கலாநிதி (PhD) - 20 புள்ளிகள்
பட்டப்பின் கற்கை பட்டம் (M.Sc, MBA, M.Eng, M.Phill, MA, MSsc ...........) - 15 புள்ளிகள்
பட்டப்பின் டிப்ளோமா (குறைந்தது ஒரு வருடம்)
- 10 புள்ளிகள்

(தடைதாண்டல்களாக பெறப்பட்ட பட்டப்பின் கற்கை பட்டம், அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமாவிற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

2.1.1 இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு 12.2 இன் பிரகாரம் வகுப்பு I இற்கு பதவியுயர்த்துவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளுக்கு-

கலாநிதி (PhD) - 20 புள்ளிகள்
பட்டப்பின் கற்கை பட்டம் (M.Sc, MBA, M.Eng, M.Phill, MA, MSsc ...........) - 15 புள்ளிகள்
பட்டப்பின் டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாதது)
- 10 புள்ளிகள்

2.2 வகுப்பு II இல் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்கு (நிரந்தரம்) பெறப்பட்ட நிர்வாக அனுபவத்திற்காக ஒவ்வொரு வருடத்திற்கும் 3 புள்ளிகள் வீதம்
- கூடியது 15 புள்ளிகள்

2.3 ஆராய்ச்சி அல்லது கண்டுபிடிப்பு வெளியீடு ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள் வீதம் (ஆராய்ச்சி கட்டுரை அல்லது அனுமதி உத்தரவு கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
- கூடியது 10 புள்ளிகள்

2.4 சிறந்த சேவைக்காக பெறப்பட்ட ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம்
- கூடியது 10 புள்ளிகள்

2.5 தொடர்பாடல் திறன்கள் - 2 புள்ளிகள்
தலைமைத்துவம் - 2 புள்ளிகள்
ஆளுமை - 1 புள்ளி

- கூடியது 5 புள்ளிகள்

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் வகுப்பு I இற்கு பதவி உயர்த்துதல்

1. பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :----.
2. முழுப்பெயர் :----.
3. அலுவலக முகவரி :----.
4. சொந்த முகவரி :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. பிறந்த திகதி :----.

7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :----.

8. பால் :----.

9. அந்தஸ்து நிலை (Civil Status) :----.

10. இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :----.

11. இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவையின் முதல் நியமனத் திகதி :----.

12. 12.1 31.07.2012 இல் மொத்த சேவைக்காலம் :----.

12.2 31.07.2012 இல் வகுப்பு II இல் சேவைக்காலம் :----.

13. கல்வித் தகைமைகள் :

13.1 க. பொ. த. (சா. த.) - வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

13.2 க. பொ. த. (உ. த.) - வருடம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

13.3 பெறப்பட்ட பட்டத்தகைமை விபரங்கள் :

| பட்டத்தின் பெயர் | துறை | பட்டம் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| (1) கலாநிதி | | |
| (2) கலைமுதுமாணி (MA)/விஞ்ஞான முதுமாணி MSc | | |
| (3) பட்டப்பின் டிப்ளோமா | | |
| (4) விஞ்ஞானமாணி (BSc)/ கலைமாணி (B.A) | | |

13.4 தடைதாண்டலுக்காக கவனத்தில் எடுக்கப்பட்ட பட்டப்பின் கற்கைப்பட்டம், பட்டப்பின் கற்கை டிப்ளோமா துறையின் பெயர் :----.

14. தொழில்சார் தகைமைகள் :

14.1 தற்போதைய பதவிக்கு பொருத்தமான துறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட தொழில்சார் தகைமைகள் :

(1) ---------------------------------------------
(2) ---------------------------------------------
(3) ---------------------------------------------

14.2 வேறு துறைகளில் பெறப்பட்ட தொழில்சார் தகைமைகள் :

(1) ---------------------------------------------
(2) ---------------------------------------------
(3) ---------------------------------------------

15. நிறுவன நிர்வாகத்திற்கு பொருத்தமாக பெறப்பட்ட தகைமைகள் :----.

16. சிறந்த ஒழுக்கத்திற்காக பெறப்பட்ட சான்றிதழ்கள்/சிறந்த சேவை விபரங்கள் :----.

17. ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு வெளியீடுகள் ஏதாவது மேற்கொள்ளப் பட்டிருப்பின் அதன் விபரங்கள் :----.

என்னால் மேலே தரப்பட்ட விபரங்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வகையில் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிமொழிவதுடன் என்னுடைய சேவைக்காலத்தில் எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள தலைவரின் விதப்புரை :**

என்னால் கீழே தரப்பட்ட விபரங்களை உடைய திரு./திருமதி/செல்வி .................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/தொழில்நுட்பவியல் கல்லூரியில்/ தொழில்நுட்ப கல்லூரியில் கடமையாற்றுகிறார் எனவும் மேற்தரப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும் அவர் தனது சேவைக்காலத்தில் எவ்விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை எனவும் உறுதியளிக்கின்றேன்.

----,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
இறப்பர் முத்திரை :----.
திகதி :----.

9-529

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை

**திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள்** :

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ்.

*2. பரீட்சை எடுக்க விரும்புவோருக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.-* இப்பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

*3.* **பரீட்சைத் திட்டம்** :

(அ) *உயர்தர வகுப்பு.-* பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:-

*பகுதி 1* : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)
வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

*பகுதி 2* : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) ***பொது வகுப்பு.-***

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலங்கள்)

(இ) ***புதுப் பயிலுநர்.-***

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

*4.* ***பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்.-*** எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையன வாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;
(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப் படுவார்கள்.

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்.-** இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

*6.* ***பரீட்சைக் கட்டணம்.-*** பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப்படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப் படலாம்.

நுழைவுப் படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி நுழைவுப் படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்படமுடியாது. தமது

விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் நுழைவும்.**- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு இறுதி நுழைவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு<br>பொது வகுப்பு<br>புதுப்பயிலுநர் வகுப்பு | 2012.09.28 |

8. **அத்தாட்சிப்படுத்தல்.**- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 4,93,920 க்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக் கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை இனம் காணல்.**- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப் படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்த்து வைக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08,
2012.09.21.

9-497

---

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2011 (I) (2012)

2004.12.24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 5.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2012, திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காது இருப்பின் அல்லது வேறு ஏதேனும் காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பப்படிவத்தின் உரிய தலைப்பினை, இங்கு காட்டப்பட்டுள்ள நகர மற்றும் நகர இலக்கங்கள் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கேற்ப பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பம் செய்துள்ள நகரம்/நகரங்கள் பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட இவ் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட் டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

4. **தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமமாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விண்ணப்பதாரி களுக்கான சட்டதிட்டங்கள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2012, ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங் களும் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப் படுகின்றனர். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

7. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் இல. 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவினதான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயார்செய்தல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் தயாரித்துக் கொள்ளப்படுமாயினும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார்செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பி வைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தில் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின்போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதானால் ரூபா 400 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 200 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்தல் வேண்டுமென்பதுடன் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு அல்லது எந்தவொரு தபால் அலுவலகத்திற்கும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப் பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறேதேனும் ஒரு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார் என்பதற்கான சான்று அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர்களின் கையொப்பங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய பிரதி பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்பிற்கு புறம்பாக எனில் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட தங்களது கோரிக்கை கடிதத்தை வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

10. அலுவலர்கள் தாம் தொடர்புடைய சேவையில் சேர்வதற்கு உரிய பரீட்சைக்கு தோற்றிய மொழிமூலம் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சையில் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு அரசாங்க முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் 5:2 பந்தியைப் பார்க்கவும்.)

12. அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டுமென்பதுடன் அவற்றை அம்மொழியிலேயே நிரப்பவும் வேண்டும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளது பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும் :

| | பாடம் | பாட இலக்கம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (02) | அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 02 மணித்தியாலங்கள் | 100 |
| | மொத்தம் : | | | 200 |

14.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

14.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்.- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள், கணக்குப் பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்தேர்வு வினாத்தாள் (காலம் : 30 நிமிடம்) - 25 புள்ளிகள்

பகுதி II - பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத் தாள் - 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். (காலம் : 90 நிமிடம்) - 75 புள்ளிகள்

15. இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2012, செத்தெம்பர் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2011 (I) 2012

## Efficiency Bar Examination for Officers in Class II of Public Management Assistants' Service – 2011 (I) 2012

(இப்பரீட்சை அறிவிப்பின்படி இணைந்த சேவைகளில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இன் அலுவலர்கள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவர்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்படி தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1\. 1.1 முதலெழுத்தை இறுதியிலிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————. உதா : SILVA, M. A.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ————.

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :————.

2\. சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

2.2 அலுவலக/திணைக்கள/நிறுவனப் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :————.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :————.

3\. பால் :-
பெண் – 1, ஆண் – 0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4\. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5\. நீங்கள் தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

6\. தற்போது வகிக்கும் பதவி :

6.1 பதவி :————.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :————.

6.3 அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் பெற்ற திகதி :————.

7\. 7.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? : ————.

7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :————.

7.3 பற்றுச்சீட்டை ஒட்டுவதற்காக :————.

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

8\. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழி மூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். ரூபா .................................. பெறுமதியான பரீட்சைக் கட்டணத்தை ................................... மாவட்ட செயலகம்/பிரதேச செயலகம்/தபால் அலுவலகத்தில் ............................. ஆந் திகதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இத்துடன் ஒட்டியுள்ளேன் என நான் உறுதி மொழிகிறேன். இப்பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சை சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி ...................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப் பட்டதென்றும்,

(ii) அலுவலர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,

(iii) அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார்/தோற்றவில்லை* என்றும்,

(iv) அலுவலர் இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள பற்றுச்சீட்டை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,

(v) அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

* தேவையற்றவைகளை கீறிவிடவும்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :————.
பதவிப் பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

9-669

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் வகுப்புக்கு (புள்ளிவிபரவியலாளர்) ஆட்சேர்ப்புச் செய்தலுக்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2012

இந்தத் திணைக்களத்தில் வெற்றிடங்கள் நிலவும் நிறைவேற்றுத் தரச் சேவை வகையின் III ஆம் வகுப்புக்கு (புள்ளிவிபரவியலாளர்) பதவிக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்யும் போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமங்களுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழ்க்குறிப்பிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவேற்றுத் தர சேவை III ஆம் வகுப்பு (புள்ளிவிபரவியலாளர்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2012.10.19 ஆகும்.

2012, திசெம்பர் மாதம் பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான ஆவணங்கள் தபாலில் தொலைந்து போனதாக அல்லது தாமதமடைந்ததாகச் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதிவரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் தொடர் ஒழுங்குமுறை மற்றும் நிலவும் வெற்றிடங்களுக்கமைய, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் சிபாரிசுக்கமைய புள்ளிவிபரவியலாளர் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(புள்ளிவிபரவியலாளர் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் இலக்கம் 8.1 இன்கீழ் காட்டப்பட்டுள்ளது.)

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர், அனாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட வேண்டும்.

(ii) புள்ளிவிபரவியலாளர் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(iv) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 7/2007 (ii) இற்கு அமைய ஏனைய அரச கரும மொழிகள் தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழிகள் தவிர்ந்த ஏனைய மொழியில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களினால் மூன்று (03) வருட காலத்தினுள் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அடுத்த அரச கரும மொழியில் ஆறு (06) வருட காலத்தினுள் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. **சம்பளத் திட்டம்**.- இப்பதவிக்கு பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 கொண்ட சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய எஸ்எல்-1-2006 ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555 (மாதாந்த) சம்பளத் திட்டம் உரித்துடையதாகும்.

4. **கல்வித் தகைமைகள்**.- புள்ளிவிபரம், கணிதம், பொருளியல், மக்களியல், சனத்தொகைக் கல்வி, கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல் அல்லது வரைபட விஞ்ஞானம் போன்ற பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தினைப் பிரதான பாடமாக உள்ளடக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வகுப்பு, சித்தியுடன் கூடிய விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

புள்ளிவிபரம், கணிதம், பொருளியல், மக்களியல், சனத்தொகைக் கல்வி, கணனி விஞ்ஞானம், தவல் தொழில்நுட்பம், புவியியல் அல்லது வரைபட விஞ்ஞானம் போன்ற பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தினைப் பிரதான பாடமாக உள்ளடக்கி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டாம் வகுப்பு (உயர்) சித்தியுடன்கூடிய சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- 21 தொடக்கம் 35 வயதிற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

6. **உடலியற் தகைமைகள்** :

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பகுதியில் சேவையாற்றுவதற்கும்,

(ii) பதவியில் கடமையாற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள இறுதித் திகதிக்கு அந்தத் தகைமைகளை அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

8.

8.1 எழுத்துப் பரீட்சை :

| | பாடங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தி யடைவதற் கான புள்ளி |
|---|---|---|---|
| 1 | விடயத்தோடு தொடர்புடைய பொது அறிவு | 100 (நேரம் : 2 மணித்தியாலம்) | 40% |
| 2 | நுண்ணறிவுப் பரீட்சை | 100 (நேரம் : 2 மணித்தியாலம்) | 40% |

**குறிப்பு**.- அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் 40% வீதம் அல்லது அதற்குமேல் புள்ளிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் இரண்டு (2) வினாப்பத்திரங்களினதும் புள்ளிகளின் கூட்டுத்தொகையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அவர்கள் பெற்ற புள்ளிகளுக் கேற்ப ஒழுங்குமுறைப்படியும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமையவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

8.1.1 இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

8.1.2 பரீட்சை முறை :

* பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
* விண்ணப்பதாரிகள் விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
* விண்ணப்பதாரி இந்தப் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
* விண்ணப்பதாரிக்கான அனுமதி அட்டையில் காட்டப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
* அனைத்து விண்ணப்பதாரிகளும் இரண்டு (02) வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

8.1.3 பாடத்திட்டம்.- விடயத்தோடு தொடர்புடைய பொது அறிவு :

(i) தேசிய மற்றும் சர்வதேசப் புள்ளிவிபரங்கள்
(ii) புள்ளிவிபரம் மற்றும் மக்கள் அபிவிருத்தி
(iii) புள்ளிவிபரம் தொடர்பான புதிய முன்னேற்றங்கள்
(iv) சமூகப் பொருளாதாரத் தகவல்கள்
(v) சுற்றாடலும் சமூகமும்
(vi) புவியியல் விடயங்களும் சமூகமும்
(vii) தகவல் தொழில்நுட்பம்

**நுண்ணறிவு**.- பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணல், தொடர்பாடல் திறன்கள், சுயகட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் உபாய மார்க்கங்களை தயாரித்தல் என்ற வகையில் விண்ணப்பதாரியிடம் காணப்படும் சிறந்த முகாமைத்துவ திறன்களை செலுத்தக்கூடிய சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு அமைவாக நிர்ணயம் செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படும்.

8.2 சாதாரண நேர்முகப் பரீட்சை.- (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் இலக்கு.- ஆட்சேர்ப்பு விதிமுறைகள் மற்றும் அதற்கமைவாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரா ? என்பதைப் பரீட்சித்தல் மற்றும் உடல் ஆரோக்கியத்தினைப் பரீட்சித்தல்.

8.3 பொதுவான நிபந்தனைகள் :

(i) இந்தப் போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டும் நடாத்தப்படும். இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்தி கட்டுப்பட்டவராவார். அச்சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு சேரும் வகையில் நாட்டினுள் காணப்படும் ஏதாவதொரு மாவட்ட செயலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்டவும். அப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி வைத்திருத்தல் வேண்டும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்படும் பணம் எக்காரணத் திற்காகவும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) இந்தப் பரீட்சை கொழும்பில் மட்டும் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

(v) முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** :

(1) அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் நுழைய இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை ஒப்படைக்க வேண்டும்.

(2) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையினை விநியோகிப்பதை, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதவேண்டாம்.

(vi) விண்ணப்பப்படிவத்தினை 22 x 29 செ. மீ. அளவில் ஏ4 கடதாசியில் தயாரிக்கவேண்டியதுடன் 1-6 வரையான தலைப்புக்களை முதலாம் பக்கத்திலும் 7-12 வரையான தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியதை 3, 4 ஆம் பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்க வேண்டுமென்பதுடன் அதற்குரிய தகவல்கள் தனது கையெழுத்தினால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள், முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதியை விண்ணப்பதாரி கைவசம் வைததிருப்பது பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதனைத் தேடி அறிய வேண்டியதுடன் அவ்வாறில்லை எனின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் தெரிவிக்கிறேன். எனவே இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பங்களைத் தயாரிக்கவும்.

(vii) விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப் பட மாட்டாதென்பதுடன் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு விநியோகிக்கப் பட்டவுடன் உடனடியாக பத்திரிகை அறிவித்தலொன்று வழங்கப்படும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் பரீட்சையினைப் பின்போடுவதற்கு அல்லது செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் பரீட்சை ஆணையாளரைச் சார்ந்ததாகும்.

(ix) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டையினை விநியோகித்தவுடன் அதுபற்றிக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு, அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது தாங்களால் பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பத்தை பதிவுசெய்து அனுப்பியதன் பற்றுச்சீட்டுக்களை உறுதிப்படுத்திய பிரதிகளுடன் உங்களின் விண்ணப்பத்தை இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தால் மிகவும் இலகுவாகு இருக்கும். (பக்ஸ் : 0112784232). நீங்கள் கொழும்பிற்கு வெளிப்பிரதேசத்தில் உள்ளவராயின் விண்ணப்பத்தை அனுப்புவதற்காக பக்ஸ் இலக்கத்தை அறிவிக்கவும்.

9. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**- பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சை மண்டபத்தினுள் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதாவதொன்று மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

எழுத்துப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தயாராக வைத்திருத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் பத்திரம்

(ii) பட்டம் மற்றும் ஏனைய கல்விச் சான்றிதழ்கள்

(iii) 2 நன்னடத்தைச் சான்றிதழ்கள் (இதில் ஒன்று பல்கலைக்கழக விரிவுரையாளரிடம் அல்லது பேராசிரியரிடம் பெற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும்.)

(iv) தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்)

(v) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த உயர் பரீட்சை தொடர்பான சான்றிதழ்கள்.

**கவனிக்க வேண்டியது :**

(அ) விண்ணப்பப்படிவத்திற்கு எந்தவிதமான ஆவணங்களையோ அல்லது அதன் பிரதி களையோ இணைத்தனுப்புதல் கூடாது.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறும் விண்ணப்பதாரி களின் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமானதாகும். நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தினை தான் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை பாடசாலை அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர்/கிராம உத்தியோகத்தர்/சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள்/ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெறுகின்ற அரச உத்தியோகத்தர்கள் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் அல்லது பௌத்த விகாரைகளின் விகாராதிபதிகள் அல்லது தலைமை மதகுரு அல்லது ஏனைய சமயங்களின் அதிகாரத்திலுள்ள மதகுருக்கள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான வேறு ஆவணங்கள் அனைத்தும் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் தவிர்ந்த வேறு எந்தவொரு நிறுவனத்திற்கோ/திணைக்களத்திற்கோ அல்லது வேறு எந்தவொரு உத்தியோகத்தரின் பெயருக்கோ அனுப்புதல் கூடாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதப்புரைக்கமைய,

செயலாளர்,
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.

பிரதான செயலக அலுவலகம்,
கொழும்பு 1,
2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination to Recruit the Executive Grade III (Statistician) for the Department of Census and Statistics - 2012

பரீட்சை சுட்டெண் : ☐
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் மொழிமூலம் : ☐
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் இறுதிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : SUNIL., A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி :

2.1 ..............................................................................
..............................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :
..............................................................................
..............................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.3 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3. 3.1 பால் : ☐
(ஆண்-0, பெண்-1)
(உரிய இலக்கத்தை கூட்டில் எழுதுக.)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. இனத் தொகுதி :
(உரிய கூட்டினுள் ✓ அடையாளம் இடுக.)

| | | | |
|---|---|---|---|
| சிங்களம் | | இந்தியத் தமிழ் | |
| இலங்கைத் தமிழ் | | மலாயர் | |
| முஸ்லிம் | | வேறு | |

6. வசிக்கும் மாவட்டம் :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----.

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :
(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்திருப்பது நன்று)
பணம் செலுத்திய திகதி :----.
பணம் :----.
மாவட்டம்/பிரதேச செயலக அலுவலகம் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும் :----.

☐

8. ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுள்ள உயர் சித்திகள் :
(பரீட்சையின் பெயரைக் குறிப்பிடவும்.)

சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

9. கல்வித் தகைமைகள் :

பட்டம் தொடர்பான விபரங்கள் :

| பட்டம் | நிறுவனம் | சித்தி | பாடம் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

வேறு கல்வித் தகைமைகள் :

| கற்கை நெறி | நிறுவனம் | பாட விபரங்கள் |
|---|---|---|
| | | |

10. வேறு தகைமைகள் :

11. தற்போது மற்றும் இதற்கு முன்னர் செய்த தொழில்கள் :

| நிறுவனம் | பதவி | தொடக்கம் | வரை | சம்பளம் (மாதம்) |
|---|---|---|---|---|
| | | | | |

12. நீங்கள் ஏதாவது தவறுக்காக நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப் பட்டவரா ? ஆம் எனின் விபரம் தருக :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவது பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தேர்ந்தெடுக்கப்பட முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனக்கு எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கும் பெறுபேறுகள் வெளியிடும்போது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதிகூறுகிறேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................................ அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிவேன் எனவும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிவேன் எனவும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ........................................................... அவர்கள் தற்போது இத்திணைக்களத்தில் ........................................................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய ஊழியராகக் கடமையாற்றுகிறார். அவன்/ அவள் (எச்சரிக்கை செய்யப்பட்டதைத் தவிர) வேறெந்த ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை எனவும்/ அந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். அவரின் ஒழுக்கம் மற்றும் கடமைகள் திருப்திகரமானவை எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அவர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

அவர் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

9-695

---

திருத்தம்

**பொது, நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் உள்ள மாவட்ட செயலாளர், அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங் களுக்கான இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில் நுட்ப அலுவலர் தரம் III தரத்துக்குச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

2012.08.24 ஆந் திகதிய 1773 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள் அலுவல கங்கள் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கான இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் III ஆம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012'' அறிவித்தல் அதன் 4 ஆம் பிரிவின் 4(அ) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் குறிப்பு உட்சேர்க்கப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது :-

**குறிப்பு**.- சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் தரமான III ஆம் தரத்துக்கு தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, வெற்றிட எண்ணிக்கைக்குப் போதியதாக இல்லா விடின் கீழ்க்குறிப்பிட்டபடி தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் எஞ்சிய வெற்றிடங்களுக்கான பயிற்சித் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இவ்வர்த்தமானி அறிவித்தலின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2012.09.24 என்பதுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவுடையனவாக இருக்கும்.

பீ. வீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012 செத்தெம்பர், 04.

9-694